**கோமரன்கடவல பிரதேச சபை**
**திருகோணமலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 யூன் 22 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை மற்றும் முகாமைத்துவ அறிக்கை முறையே 2020 ஆகஸ்ட் 26 மற்றும் 2020 ஆகஸ்ட் 26 ஆந் திகதிகளில் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கோமரன்கடவல பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டுக்குரிய கிடைக்க வேண்டிய வங்கி வட்டி ரூபா 309,394 வருமானம் நாற்குறிப்பு ஊடாக வருமானக் கடன்பட்டோர் கணக்கில் சீர் செய்யப்பட்டிருந்ததுடன் காசுப் புத்தகத்தில் சீர் செய்யப்படாமையினால் வங்கி மீதி அத்தொகையில் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | திருத்தப்பட்ட காசு புத்தகத்தின் மீதி இறுதிக் கணக்குகளில் சீர் செய்யப்பட வேண்டும். | 2020 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ii) | வங்கிக்கு கிடைத்த நேரடி வைப்புக்கள் கணக்கிடப்படாததன் காரணமாக மூலதன வருமானங்கள் ரூபா 1,604,941 மற்றும் மீண்டெழும் நன்கொடைகள் ரூபா 789,671 குறைவாக காட்டப்பட்டிருந்தது. | இறுதி நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | 2020 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

(ஆ) **கணக்காய்விற்காக தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக ரூபா 130,621 ஆன சபையின் வைப்புக்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக அவதானிக்க முடியாதுள்ளது. | மீதியை அடையாளங் கண்டு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த அலுவலகத்தின் 2010 மற்றும் அதற்கு அண்மித்த வருடங்களில் கணக்குகள் தயாரிக்கும் போது இப்படியான வைப்பாக ரூபா 130,621 தொகை குறிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டுள்ளதுடன் அதற்காக எவ்வித உப பதிவேடுகளையும் கண்டறிய முடியாதுள்ளதுடன் மேலும் இந்த மீதியை முன்கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது |

**1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இனங்காமைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 ஆம் வருட 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபைச் சட்டம் | | | |
| (i) 159 ஆவது பிரிவு | மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 216,185 நிலுவை வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபைக்கு அறவிடப்பட வேண்டிய அனைத்து நிலுவை வருமானங்களையும் ஒன்று திரட்டிக் கொள்வதற்கான நடவடிக்கைகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. |
| (ஆ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் | | | |
| (i) 217 ஆவது விதி | உரிய மாதிரிப் படிவத்தில் காட்டப்பட்டுள்ளவாறு சபையினால் பயன்படுத்தப்படும் அனைத்து காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபை விதிகளின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | வேலை பார்ப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள வருமான பரிசோதகரின் உதவியைப் பெற்றுக் கொண்டு அந்த வேலைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 218 ஆவது விதி | அனைத்து காணி மற்றும் கட்டிடங்களையும் ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு முறை பரீட்சித்து பரிசோதனை அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படவில்லை. | பிரதேச சபை விதிகளின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | வேலை பார்ப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள வருமான பரிசோதகரின் உதவியைப் பெற்றுக் கொண்டு அந்த வேலைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 110 | 02 சந்தர்ப்பங்களில் இடம்பெற்ற ரூபா 1,100,772 ஆன வாகன சேதங்கள் சம்பந்தமாக சேத பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இரண்டு சந்தர்ப்பங்களிலும் வாகனங்களுக்கான பூரணமான காப்புறுதி நட்டஈடு பெறப்பட்டதுடன் சேத பதிவேடொன்றை பேணுவதற்கு உரிய அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 396(இ) | 6 மாதங்கள் கடந்த ரூபா 45,447 ஆன 11 காசோலைகள் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய காசோலைகள் சம்பந்தமான இந்த வருடத்திலே நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 571 | 02 வருடங்கள் கடந்த ரூபா 839,920 ஆன 28 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பல்வேறு வைப்புக்கள் மற்றும் வருமான வைப்புக்கள் சம்பந்தமாக இந்த வருடத்திலே நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (iv) | நிதிப்பிரமாணம் 880 | பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு பிணை வைப்பு மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புச் செய்வதற்கு இந்த வருடத்திலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (v) நிதிப்பிரமாணம் 1645(ஆ) மற்றும் 1646 | 7 வாகனங்களின் ஓட்டக் குறிப்பு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த வருடத்திலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வாகன விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் செலவினத்தை விஞ்சிய மீண்டுவரும் வருமானம் ரூபா 450,562 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 3,217,338 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| மூலம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 50 | 124 | 124 | - | 50 | 31 | 31 | - |
| வாடகை | 3,386 | 3,639 | 3,180 | 459 | 2,165 | 3,336 | 3,647 | 188 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 125 | 23 | 23 | - | 126 | 124 | 124 | - |
| வேறு வருமானங்கள் | 3,358 | 3,887 | 3,226 | 660 | 1,404 | 2,259 | 2,259 | 5,453 |
| மொத்தம் | 6,919 | 7,673 | 6,553 | 1,119 | 3,745 | 5,750 | 6,061 | 5,641 |

#### 2.2.2 வாடகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கடைகள் மற்றும் வீடுகளை குத்தகைக்கு வழங்கும் போது 04 நபர்களுக்குரிய மொத்தம் ரூபா 48,350 ஆன நிலுவைத் தொகை 2012 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | நிலுவைத் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | அனைத்து நிலுவைத் தொகைகளையும் துரிதமாக அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய உத்தியோகத்தருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஆ) நடாத்தப்படுகின்ற கடைகளில் 10 கடைகள் 1990 இலிருந்து 2006 வரையான காலஎல்லைக்குள் 04 கடைகளுக்காக 2019 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை என்பதுடன் அவ்வாறு ஒப்பந்தத்துக்கு உட்படுத்தாத 04 கடைகளுக்குரிய 2019 ஆம் ஆண்டில் அறவிடப்பட வேண்டி காணப்படுகின்ற நிலுவைத் தொகை மற்றும் தண்டப்பணமாக ரூபா 65,736 தொகையொன்று காணப்படுகிறது. | குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்துக்களுக்காக ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கும் நிலுவைத் தொகைகளை அறிவடுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்தக் கடைகளை டெண்டர் முறைமையினூடாக கொள்வனவாளருக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் அனைத்து நிலுவைத் தொகை மற்றும் தண்டப் பணங்களை அறவிடுவதற்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேலை பார்க்கும் வருமான பரிசோதகருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. |

### 2.2.3 அனுமதி பத்திரக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வணிக மற்றும் தொழில் குறித்த ஆய்வு நடாத்தப்படவில்லை | வருடாந்தம் வணிக மற்றும் தொழில் குறித்த ஆய்வு நடாத்தப்பட வேண்டும் | இப்பகுதியில் வணிக மற்றும் தொழில் ஆகியவற்றை கண்டறிந்து அவர்களிடமிருந்து உரிய கட்டணங்களை வசூலிக்க வருமான ஆய்வாளர் நிறுத்தப்படுகின்றனர் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பண்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள் சம்பந்தமான காரணங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய விடயங்கள் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 28 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த | உப விதிகளை அடையாளங் கண்டு தயாரித்த பின்னர் அதை அமுல்படுத்து | கிழக்கு மாகாண மதிப்பிற்குரிய ஆளுனரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கு வரையறுக்கப்பட்டள்ள ஐந்து உப விதிகள் சபையினால் |

| | | |
|---|---|---|
| போதிலும், திசெம்பர் 31 இலும் உப விதிகள் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | வதுற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | அங்கீகரிக்கப்பட்டு அந்த தீர்மானங்கள் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எமது சபையில் நிலவுகின்ற உக்கிர பதவியணியினரின் பற்றாக்குறையின் பாரணமாக இந்தத் திட்டம் தயாரிப்பது கடினமான விடயமாகவுள்ளதுடன் இருப்பினும் இனிவரும்காலங்களில் செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**(இ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் நடைமுறைப்படுத்தப்படும் அது போன்ற 09 முயற்சிகளுக்காக அனுமதிப்பத்திரம் பெறப்படாமல் தொழில்முயற்சிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ள வேண்டிய தொழில் முயற்சிகளை அடையாளங் கண்டு அந்த அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய தொழில்களை அடையாளங் கண்டு அவற்றுக்கு சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களை விநியோகிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடையாளங் கண்டிருக்க வில்லையென்பதுடன் அது சம்பந்தான அறிவையும் பெற்றிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடையாளங் கண்டு நடைமுறைப்படுத்து | பிரதேச சபை மட்டத்தில் நடைமுறைப்படுத்தக்கூடிய நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடையாளங் கண்டு அந்த இலக்குக்கான நோக்கத்தை |

| | | |
|---|---|---|
| | வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நிறைவேற்றுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 3.2 முகாமைத்துவ திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிவில கடவல கடைகள் சம்பந்தமாக கடை வாடகை பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் உரிமையை உறுதிப்படுத்தக் கூடிய வேறு பதிவேடு சபையிடம் காணப்படவில்லை. | துரிதமாக முறையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருமான மேம்பாட்டை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இது தொடர்பாக விசேட அவதானத்தை ஈடுபடுத்தி நடவடிக்கைகளை தேடிப்பார்த்து உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சபைக்கு வருமானமொன்றை பெற்றுக் கொள்ள முடியுமான வகையில் இந்த கடைகளை வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வருமான பரிசோதகருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உத்தியோகத்தர் பதவி 06 க்குரிய 11 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | ஊழியர் வெற்றிடங்களை முழுமைப் படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | மூன்று வருடங்களுக்கு அதிக காலமாக எங்கள் சபையில் நிலவுகின்ற உக்கிரமான ஊழியர் பற்றாக்குறை தொடர்பாக உரிய அதிகாரிக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டள்ள போதிலும், இதுவரை அதற்கு தீர்வு கிடைக்கவில்லை. |
| (ஆ) | ஓய்வு பெற்ற மற்றும் காலஞ்சென்ற உத்தியோகத்தர் களுக்குரிய ரூபா 228,800 இடர் கடன் தொகையை அறவிட்டுக் கொள்ளாமல் அடிக்கடி முன்கொண்டு வரப்பட்டுக் கொண்டிருக்கின்றன. | பொருத்தமான நடவடிக்கைகள் துரிதமாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். | பிரதேச சபையின் முன்னால் செயலாளரான திரு.பீ.பீ.விமலசிறி அவர்களின் தனிப்பட்ட கோவையை கையளிக்காமல் அவரிடம் வைத்திருப்பதாக தெரிய வந்துள்ளது. உத்தியோகத்தர் ஓய்வூதியம் பெறும் வரைக்கும் தற்போது நிலுவையாக காணப்படுகின்ற தொகையை அறவிடுவதற்கு முடியாது காணப்பட்டதுடன் காலஞ்சென்ற திரு.எச்.ஏ.பீ ரஞ்சன அவர்களின் இடர்கடன் நிலுவை மீதி ரூபா 147,600.00 ஆக இருப்பதுடன் அவரின் |

இறப்பு சம்பந்தமாக இன்னும் நீதிமன்றத்தில் வழக்கொண்டு காணப்படுவதுடன் இறப்புச் சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. ஓய்வூதியத் தொகையிலிருந்து அந்த நிலுவைக் கடன் மீதியை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்றகொள்ளப்படும்.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கருவலவத்தை கடைகளின் வாடகை உரிமையாளரினால் அந்த கடைகள் அமைந்துள்ள பிரதேச சபையின் காணியின் ஒரு பகுதியை பிரயோசனப்படுத்தி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | அனுமதியற்ற நிர்மாணப் பணிகளுக்காக துரிதமாக பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | கருவலகஹவத்தை கடைகளின் வாடகை உரிமையாளரினால் சபையின் காணியின் ஒரு பகுதியை பிரயோசனப்படுத்தி நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக தாமதமாகவே தெரிய வந்ததுடன் தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 05 வாகனங்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரிமையை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | குத்தகை முறையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டுள்ளமையால் அதன் பதிவு செய்யும் உரிமை அந்த அமைச்சின் செயலாளரின் பெயரில் உள்ளது. 49-0303, 46-4196 மற்றும் WP8815 வாகனங்களின் பதிவு செய்யும் உரிமையை மாற்றுவதற்காக இனிவரும் காலங்களில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

### 3.4.3 குறைப்பயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) பிரதேச சபைக்குரிய கெப் வாகனம் 2004 ஆம் ஆண்டிலிருந்தும் | துரிதமாக பொருத்தமான நடவடிக்கைகள் | இயங்கும் நிலையில் இல்லாத வாகனங்களை திருத்தங்களை மேற்கொள்வதற்கும் முடியாத நிலையில் |

| | | | |
|---|---|---|---|
| | உழவு இயந்திரம் 2008 ஆம் ஆண்டிலிருந்தும் பாவனைக்குட்படுத்தாது நீக்கப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட வேண்டும். | காணப்படுவதுடன் நீக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | உழவு இயந்திரம் , கெப் வாகனம் மற்றும் உழவு இயந்திரப் பெட்டி 2019 ஆம் ஆண்டிலிருந்து பயன்பாட்டிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. | துரிதமாக பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | கெப் வாகனத்தை திருத்துவதற்காக 2020 பாதீட்டில் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதும் அந்த ஏற்பாட்டுத் தொயில் ஒரு பகுதியை கொரோனா தொற்றை ஒழிக்கும் செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்த நேர்ந்தது. இருப்பினும், எஞ்சியுள்ள ஏற்பாட்டுத் தொகை இந்த வாகனத்தை திருத்துவதற்கு போதுமானதாக இருப்பின் இந்த வருடத்திலேயே திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கும், ஏற்பாடு போதுமானதாக இல்லாதிருப்பின் எதிர்வரும் வருடத்திலே திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய உழவு இயந்திரம் மற்றும் உழவு இயந்திரப்பெட்டி என்பவற்றை எதிர்காலத்தில் திருத்தங்களை மேற்கொண்டு பாவனைக்குட்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. |

### 3.5 பெறுகைகள்

#### 3.5.1 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டுக்கான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனினும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்திற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படுவதற்கும் அதன்படி நடவடிக்கை மேற்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

### 3.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டிற்குள் சபையினால் மந்திரிகளின் ஏற்பாடாக ரூபா 301,340 செலவு செய்து சனசமூக சபை மற்றும் அமங்கல | அனைத்து தரப்பினரும் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டு | மந்திரிகளின் ஏற்பாட்டின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை அந்தந்த பகுதிகளின் மந்திரிமார்களின் ஊடாக உரிய சனசமூக சபை மற்றும் மரண |

| | | | |
|---|---|---|---|
| | உதவிச் சபை மற்றும் அமங்கல உதவிச் சங்கங்களுக்கு கதிரைகள் மற்றும் வேறு பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருந்தது. விநியோகிக்கப்பட்ட பொருட்களுக்குள் ரூபா 159,300 பெறுமதியான உபகரணங்கள் மற்றும் கதிரைகள் குறிப்பிட்ட மந்திரியின் வீட்டில் வைக்கப்பட்டிருந்தது. மேலும், ரூபா 122,880 பெறுமதியான உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டு ஒரு வருடம் கடந்திருந்தாலும் பாவனைக்கு உட்படுத்தியிருக்கவில்லை. ரூபா 21,420 பெறுமதியான 18 கதிரைகள் கையளிக்கப்படாமல் இருந்தது. | மென்பதுடன் அதற்கான முறையான பதிவுகளை பேண வேண்டும். | உதவிச் சங்கங்களுக்கு விநியோகிக்குமாறு மேதகு சபையில் கலந்துரையாடப்பட்டதுடன் ஒரு சில மந்திரிகள் சனசமூக சபை மற்றும் தரண உதவிச் சங்கங்களில் வெவ்வேறு பதவிகள் வகிப்பதனால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும் கணக்காய்வு அவதானிப்பு சம்பந்தமாக அனைத்து மந்திரிகளுக்கும் தெரியப்படுத்தி விநியோகிக்கப்பட்டுள்ள அந்த பொருட்களை குறைவில்லாமல் உரிய சனசமூக சபை மற்றும் மரண உதவிச் சங்கங்களுக்கு உடனடியாக முறையாக வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | வருமானப் பெறுவனவுகளை குறித்துக் கொள்வதற்கான வருமான பதிவேடுகள் வெவ்வேறாக பேணப்பட வேண்டுமெனினும், வாகன வருமானங்கள், வாரச் சந்தை வருமானங்கள், மற்றும் கூட்ட மண்டப வருமானங்களுக்காக வருமான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | வருமானங்களுக்கான சரியாக பதிவேடு பேணப்பட வேண்டும். | வருமானங்கள் பதிவேடுகளை வெவ்வேறாக பேணப்படுவதற்காக உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்படும். |

### 3.7 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக அவ்வாறான ஒப்பந்தத்திற்கு முற்படாமல் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் வேலை முடிவுறும் அறிக்கையொன்றும் | அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது முறையாக ஒப்பந்தத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும். | ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் அவை முறையாக முழுமைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. விடயத்திற்கு பொறுப்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர் ஒருவர் இல்லாததன் காரணமாக இந்த குறைபாடு |

| | | |
|---|---|---|
| இல்லாமல் அதற்காக ரூபா 301,235 செலுத்தப்பட்டிருந்தது. | | ஏற்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்வதுடன் அந்த குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 தீர்க்கப்படாத அவதானிப்புக்கள் மற்றும் விடையளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளுராட்சி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட உள்ளுராட்சி நிறுவனங்களில் முகப்பு அலுவலகங்களை தாபிக்கும் வேலைத்திட்டம் 2017 இன் படி மாகாண சபைக்ள மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் ஏற்பாடின் கீழ் சபையினால் ரூபா 283,998 பெறுமதியான அலுவலகஉபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அத்தோடு உரிய வேலைத்திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டிலே கணனி மற்றும் உதிரிப்பாக தொகுதி 03 மற்றும் அச்சு இயந்திரமொன்றும் அந்த அமைச்சினால் சபைக்கு கொடுக்கப்பட்டிருந்த போதிலும், 2020 யூலை 03 ஆந் திகதியிலும் அவ்வாறான முகப்பு அலுவலகமொன்று ஸ்தாபிக்கப்பட்டு நடாத்திச் செல்லப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்த உபகரணங்கள் தற்போது அழிவடைந்து இருக்கின்றது. | முகப்பு அலுவலகங்களை நிறுவதற்கு சொத்துக்களின் ஆயுள் உறுதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | திவீரமாக ஊழியர்கள் பற்றாக்குறையாக இருப்பதால் முகப்பு அலுவலக திட்டத்தை செயற்படுத்த முடியவில்லை முகப்பு அலுவலகம் அமைப்பிற்கு வழங்கப்பட்ட கணனி சாதனங்களில் UPS மற்றும் Monitor மட்டுமே செயலற்ற நிலையில் உள்ளது. போதுமான ஊழியர்கள் வழங்கப்பட்டவுடன் முகப்பு அலுவலகத்தை நிறுவ ஏற்பாடுகள் செய்யமுடியும். |
| (ஆ) | 2014 இன் பாதீட்டு முன்மொழிவுகளுக்கமைய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக உள்ளூராட்சி மக்கள் பிரதிநிதிகளுக்காக சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்கிள் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் சபையினால் 08 உறுப்பினர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்குவதற்கு அறவிடப்பட்ட ரூபா 317,870 பணம் தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டுமெனினும், 2020 யூலை 03 ஆந் திகதி வரைக்கும் அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | துரிதமாக உரிய தொகையை பாதீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | 07 உள்ளுராட்சி மக்கள் பிரதிநிதிகளுக்காக மோட்டார் சைக்கிள் வழங்குவதற்காக அறவிடப்பட்ட ரூபா 317,870 பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருப்பதுடன், அது தொடர்பாக தேடிப்பார்த்து அந்த தொகையை தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு இவ்வருடத்திலேயே தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |